பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 09 2025 THURSDAY 12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உலகளாவிய சவால்களுக்கு இடையிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. திருப்பதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்குமிடத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று திறந்து வைத்தார்.

3. உற்பத்திக்கான இந்தியா இயக்கம் நாட்டை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றியுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. ரயிலிலிருந்து செலுத்தக்கூடிய அக்னி ப்ரைம் ஏவுகணை வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

5. Kaohsiung Masters பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Isharani Baruah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

உலகளாவிய சவால்களுக்கு இடையிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் சர்வதேச வர்த்தக கண்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாடு சுயசார்பு அடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு பொருளும் இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுயசார்புக்கான நடவடிக்கைகளை அரசு விரைவுபடுத்தியிருப்பதாக கூறிய அவர், செமிகண்டக்டர் சிப்கள் முதல் கப்பல் வரை இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்படுவதாக தெரிவித்தார்.

சோதனையான காலகட்டத்தில் இந்தியாவிற்கு ஆதரவாக திகழும் ரஷ்யாவின் ஒத்துழைப்புடன் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் ஏ.கே-203 ரக துப்பாக்கிகள், பிற ரகங்களை விட திறன் வாய்ந்தவையாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்பு துறையில் வலிமையான நாடாக இந்தியா உருவாகி வருவதை சுட்டிக்காட்டிய அவர், பாதுகாப்பு தளவாளங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள். நாட்டின் வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளித்திருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, உத்தரபிரதேச மாநிலம், பிருந்தாவன் சென்றுள்ளார்.

தனி ரயில் மூலம், தில்லியிலிருந்து பிருந்தாவன் சென்ற குடியரசுத்தலைவரை ரயில் நிலையத்தில் உத்தரபிரதேச மாநில அமைச்சர் திரு. லஷ்மிகாந்த் சௌத்ரி வரவேற்றார்.

பிருந்தாவனத்தில் உள்ள பல்வேறு கோவில்களில் வழிபாடு செய்யும் குடியரசுத்தலைவர், மதுராவில் உள்ள பிரசித்தி பெற்ற கிருஷ்ணர் கோவிலுக்கும் செல்லவுள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

திருப்பதியில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் இடத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று திறந்து வைத்தார்.

முன்னதாக, ஏழுமலையான் கோவிலில் குடியரசு துணைத்தலைவர் வழிபாடு செய்தார்.

*இதனிடையே, ஏழுமலையான் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான நவீன கட்டுப்பாட்டு மையத்தை ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தொடங்கி வைத்தார்.*

<<<<<<<>>>>>>>>

*உற்பத்திக்கான இந்தியா இயக்கம் நாட்டை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றியுள்ளது என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்*

*உற்பத்திக்கான இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டு இன்றுடன் 11 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த இயக்கம் நாட்டின் பொருளாதாரத்திற்கு புதிய அடையாளத்தை ஏற்படுத்தி உள்ளதாக கூறியுள்ளார்.*

*உற்பத்திக்கான இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டதன் மூலம், உள்நாட்டு உற்பத்திக்கு புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*கடந்த 11 ஆண்டுகளில் அந்நிய நேரடி முதலீடு பெருமளவு அதிகரித்துள்ளதாகவும், சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்உற்பத்தி சாதனங்கள், விமான உதிரிப் பாகங்கள் தயாரிப்பு, விண்வெளி சாதனங்கள் என பல்வேறு துறைகளிலும் புரட்சி ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*குறிப்பாக, செல்ஃபோன்கள் உற்பத்தியில் இந்தியா, உலகின் இரண்டாவது பெரிய நாடாக உருவெடுத்திருப்பதையும் திரு. பியூஷ் கோயல் சுட்டிக்கட்டியுள்ளார்.*

<<<<<<<>>>>>>>>

*இந்தியாவின் யுபிஐ பணப்பரிவத்தனை முறையை தற்போது கத்தார் நாடும் பயன்படுத்த தொடங்கியுள்ளதாக மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.*

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஏற்கனவே 7 நாடுகள் இந்த முறையை பின்பற்றி வரும் நிலையில் 8வது நாடாக கத்தாரும் இந்த வசதியை பயன்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

கத்தார் நாட்டிற்கு அதிக அளவில் செல்லும் வெளிநாட்டவர்களில் இந்தியர்கள் 2வது இடம் வகிக்கும் நிலையில். யுபிஐ பரிவர்த்தனையை அந்நாட்டில் பயன்படுத்துவது இந்தியர்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்று திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>>

ரயிலிலிருந்து செலுத்தக்கூடிய நடுத்தர தொலைவு அக்னி ப்ரைம் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது.

சாலை மற்றும் ரயில் மார்க்கமாக எடுத்துச் செல்லக்கூடிய இந்த ஏவுகணையை வெற்றிகரமாக செலுத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளுக்கு, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த ஏவுகணை, 2 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்கை தாக்கும் திறன் கொண்டது என்று அவர் கூறியுள்ளார்.

குறைந்த வெளிச்சத்திலும் விரைவில் எடுத்துச் சென்று செலுத்தக்கூடிய இந்த ஏவுகணை, பாதுகாப்புப் படையினருக்கு பேருதவியாக இருக்கும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>>

பாரதிய ஜனசங்க நிறுவனர் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி தலைவர்கள் பலர் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டின் உண்மையான சேவகராக திகழ்ந்த பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா, கலாச்சார வளமிக்க இரக்கம் மற்றும் மனிதநேயமிக்க இந்தியாவை காண விரும்பியதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், மனிதநேயத்தின் முன்னோடியாக திகழ்ந்தவர் தீன்தயாள் உபாத்யாயா என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது தேசிய சிந்தனைகளும், ஏழை மக்கள் மீதான பரிவும் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், கலாச்சார மேம்பாட்டுடன் கூடிய பொருளாதார வளர்ச்சிக்காக பாடுபட்டவர் தீன்தயாள் உபாத்யாயா என்று கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மக்களிடையே சுதந்திர வேட்கையை ஏற்படுத்துவதில் பெரும்பங்கு வகித்த தீன்தயாள் உபாத்யாயா, கிராம சுயாட்சி மற்றும் சுதேசி கொள்கைகளை தீவிரமாக ஆதரித்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

தர உத்திரவாதம் மற்றும் எதிர்காலத்திற்கான திறன் மேம்பாடு குறித்த பயிலரங்கம் நாட்டின் திறன் மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

*தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் குழுமம் சார்பில் சென்னையில் நடைபெற்ற தென்மண்டல அளவிலான கருத்தரங்கை காணொலி வாயிலாக தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*நாட்டின் வளர்ச்சிக்கு திறன் மேம்பாடு முக்கியம் என்று குறிப்பிட்ட அவர். இந்த முயற்சியை வலுப்படுத்த மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்களையும் எடுத்துரைத்தார்.*

*தமிழகம், ஆந்திரா, கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட தென்மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த கல்வி நிறுவனங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.*

*<<<<<<<<>>>>>>>>*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தத்திற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.*

*இந்த சீர்திருத்தம் மூலம், வேளாண் சாதனங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மீதான வரி குறைக்கப்பட்டதற்கு, தமிழகத்தின் நாகை மாவட்டம், பாலையூர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சங்க நிர்வாகி தமிழ்ச்செல்வன் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.*

*(சவுண்ட் பைட் – தமிழ்ச்செல்வன் 42 செகண்ட்ஸ்)*

*<<<<<<<<>>>>>>>>*

*Kaohsiung Masters பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் Isharani Baruah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 15-21, 21-14, 23-21 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Ruo Hsuan Ko-வை வென்றார்.*

*<<<<<<<<>>>>>>>>*

*துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Madhurima Sawant – அமெரிக்காவின் Savannah இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-1 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Mutsumi – ஜெர்மனியின் Pia Praefke இணையை வென்றது.*

*<<<<<<<>>>>>>>>*

*உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஷ்யாம் சுந்தர் சுவாமி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<<<>>>>>>>>*

*தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு இரண்டாவது சுற்றில் அவர், 146-142 என்ற புள்ளிக்கணக்கில் பிரிட்டனின் Jamie Harris-ஐ வென்றார்.*

*<<<<<<<>>>>>>>>*